1979 நவம்பர் 3]

தனியார் பள்ளிகளது வரன்முறை·

*வினா எண் 90 திரு. ஒ. சோ. வேலுசாமி ; மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திரு. எம். டி. பால் அவர்கள் அளித்திருந்த அறிக்கையினை பரிசீலனை செய்து கல்விச் சட்டங்களை மாற்றியமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரங்கள் என்ன?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்):

(அ) மற்றும் (ஆ) திரு. எம். டி. பால் அவர்கள் அளித்துள்ள பரிந்துரையின் அடிப்படையில் தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார்ப் பள்ளிகள் வரன்முறைச் சட்டம், 1973 மற்றும் அதன் கீழ் தமிழ்நாடு தனியார்ப் பள்ளிகள் வரன்முறை விதிகள் 1974 ஆகியவை இயற்றப்பட்டு இம்மாநிலத்தில் 1-12-74 முதல் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

திரு. ஓ.சோ. வேலுச்சாமி : பேரவைத் தலைவரவர்களே, பெரும்பாலான தனி நபர் பள்ளிகளும் கமிட்டி பள்ளிகளும் லிமிடெட் கம்பெனிகளைப் போலவும் ஜாதி ஸ்தாபனங்களாக நடத்தப்பட்டு வருகிறது. இப்பொழுது 1974 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டத்திற்குப் பிற்பாடும் அதே குறைபாடுகளும் ஒழுங்கீடும் தனியார் பள்ளிகளிலே இருப்பதை நாம் பார்க்கிறோம். ஆகவே, அதைக்களைய இந்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவரவர்களே, டாக்டர் எம். டி. பால் அவர்கள் 1971-ல் அளித்த அறிக்கையில் காணப்பெற்ற பரிந்துரைகளின் அடிப்படையில் தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார்ப் பள்ளிகள் வரன்முறைச் சட்டம், 1973 மற்றும் தமிழ்நாடு தனியார்ப் பள்ளிகள் வரன்முறை விதிகள், 1974 ஆகியவை இயற்றப்பட்டன. அது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, சட்டம் இயற்றிய பிறகும் தனியார் பள்ளிகளில் குறிப்பாக மைனாரிட்டி இன்ஸ்டிடியூஷன்களில், பணியாற்றுகிற ஆகிரியர்களுக்கு சட்டப்படியான உரிமைகள் கூட மறுக்கப்படுகிறது. குறிப்பாக, இப்போதுள்ள படி ஃபன்டமென்ட்டல் ரைட்ஸ் கூட மறுக்கமுடியாது. ஆனால், சி, எஸ். ஐ. என்று சொல்லக் கூடிய சர்ச் ஆஃப் சௌத் இந்தியா போன்ற இன்ஸ்டிடுயூஷன்கள் நடத்துகின்ற பள்ளிகளில்

ஆசிரியர்களைச் சேர்க்கிறபொழுது நான் கோர்ட்டுக்குப் போக மாட்டேன், எந்தத் தாவா வந்தாலும் என்ற அன்டர்டேக்கிங் வாங்கிய பிறகுதான் சேர்க்கிறார்கள் என்று அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படி என்றால் இது கன்டம்ப்ட் ஆஃப் கோர்ட் அல்லவா? கன்டம்ப்ட் ஆஃப் கான்ஸ்டிடியூஷன் அல்லவா? ஆகவே, ஆசிரியர்களைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் வேறு சட்டங்கள் ஏதாவது கொண்டுவர உத்தேசம் உண்டா?

(முற்பகல் 9-40)

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்) : மேற்சொன்ன சட்டத்தினையும் அதன் விதிகளையும் எதிர்த்து 1300க்கும் மேற்பட்ட ரிட் மனுக்கள் தனியார்ப் பள்ளி நிர்வாகத் தினரால் சென்னை உயர்நீதி மன்றத்தில் 1975-ம் ஆண்டில் தொடுக்கப்பட்டன. இதனை விசாரித்த உயர்நீதி மன்றம் 17-12-1975 நாளிட்ட தீர்ப்பில் மேற்சொன்ன சட்டத்தின் பெரும்பான்மையான பிரிவுகள், மொழி மற்றும் மத அடிப்படை யிலான சிறுபான்மையினருக்கு அரசியல் அமைப்புச் சட்டப் பிரிவு 30 (1)-ல் அளிக்கப்பட்டுள்ள உரிமைகளுக்கு முரணாக உள்ளது என்று கூறி அப்பிரிவுகள் சிறுபான்மையினர் நடத்தும் பள்ளிகளுக்குப் பொருந்தாது என்று கூறியுள்ளது.

இச்சட்டத்தையும் அதன் விதிகளையும் சிறுபான்மையினர் பள்ளிகள். சிறுபான்மையினர் அல்லாதார் பள்ளிகள் என்ற பாகுபாடு இன்றி அனைத்துத் தனியார் பள்ளிகளிலும் அமுல் செய்யவும், சிறுபான்மையினர் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர் கட்கு உரிய பணி பாதுகாப்பு வழங்கவும்—சிறுபான்மையினர் பள்ளி நிர்வாகங்களை உரிய முறையில் கட்டுப்படுத்தவும் மேற் சொன்ன சென்னை உயர்நீதி மன்ற 17-12-75 நாளிட்ட தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்ய உச்ச நீதி மன்றத்தில் தனி முன் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கொண்டு மேல் முறையீடுகள் உச்ச நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் கூறிய குறை பாடுகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, நான் 5 கேள்விகளாக கையைத் தூக்கிக் கொண்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து கேள்வி நேரத்தில் எழுந்து நின்று என்னைக் கேள்வி கேட்கக் கூடாது. நீங்கள் கையைத் தூக்குங்கள் என்று நான் சொல்லவில்லை.